අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. : ED/02/29/21/06
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. :
දිනය / திகதி / Date : 2024.04

பொது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ள அனைவருக்கும்,

**நாட்டின் தேசிய பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3-I (அ) இற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023 (2024)**

மேற்படி ஆட்சேர்ப்பு தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 2359 மற்றும் 2023.11.17ம் திகதியுடைய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3- I (அ) இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தங்களது தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான பொது நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை ஆகியன 2024.04.29ம் திகதி முதல் பத்தரமில்லை, இசுருபாய, கல்வி அமைச்சில் நடைபெறும்.

இதற்குத் தகுதி பெறுகின்ற விண்ணப்பதாரர்களது பெயர் பட்டியல் இணைப்பு 02 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 01. பொது நேர்முகப் பரீட்சை

1.1 குறித்த இணைப்பு 01 இல் உள்ளடக்கப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள்/ ஆவணங்களின் **மூலப் பிரதிகள் மற்றும் நகல் பிரதிகளை (தங்களால் சான்றுப்படுத்தப்பட்ட) தனித்தனியாக இணைத்து** தயாரிக்கப்பட்ட இரண்டு பிரத்தியேக கோவைகள் சகிதம் உரிய நேரத்தில் கலந்துகொள்ளுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

I. தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு அல்லது சாரதி அனுமதிப் பத்திரம்

II. பிறப்புச் சான்றிதழ் (குறுகிய குறிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. திருமணத்தின் பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் திருமணச் சான்றிதழுடன் சத்தியப் பிரமாண பிரகடனம் ஒன்றையும் முன்னிலைப்படுத்துதல் வேண்டும்)

III. **பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட க.பொ.த சாதாரண தர பரீட்சைச் சான்றிதழ்** (பரீட்சை ஆணையாளர் நாயகத்தான் உள்நாட்டு மற்று வெளிநாட்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு சமமானதாக ஏற்றுக் கொள்ளப்படும் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்கள் அவற்றிற்குரியதாக சான்றுப்படுத்தப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட சான்றிதழை கொண்டு வருவது கட்டாயமாகும்.

IV. செல்லுபடியாகும் பட்டச் சான்றிதல் மற்றும் பட்டத்தில் கற்றுள்ள பாடங்கள் உள்ளடங்கிய விவரிக்கப்பட்ட பெறுபேறுகள் படிவம் (Academic Transcript) கட்டாயமாக முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

V. பட்டம் உள்நாட்டு அரச சார்பற்ற பல்கலைக்கழகமொன்றில் அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பின் குறித்த பல்கலைக்கழகம்/ பட்டமளிப்பு நிறுவனம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்க்கலைக்கழகம்/ நிறுவனம் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணமொன்று.

VI. பட்டக் கல்வியைத் தொடர்ந்த மொழி மூலத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள்

VII. வதிவினை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவரால் வழங்கப்படும் சான்றிதழ்

VIII. அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட 01 நற்சான்றிதழ்

IX. தங்களால் முன்னிலைப்படுத்தப்படும் சான்றிதழ்களில் பெயர் வித்தியாசங்கள் காணப்படும் பட்சத்தில் அதற்குரியதாக சத்தியப் பிரமாணப் பிரகடனம்

தரப்பட்டுள்ள அனைத்து ஆணங்களையும் **<u>பொது நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்தன்று முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதுடன் பின்னராக கிடைக்கப்பெறும் ஆவணங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.</u>**

பொது நேர்முகர்ப் பரீட்சைக்குத் தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள், அன்றைய தினத்திலேயே நடைபெறும் செயன்முறைப் பரீட்சையிலும் பங்கேற்க வேண்டும்.

## 02. செயன்முறைப் பரீட்சை

2.1. இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 திகதியுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலூடாக பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.3.4ம் பந்திக்கமைய இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3-I (அ) இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு கீழ் வருமாறு தயாராகி கலந்துகொள்ள வேண்டும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2 இப் பரீட்சையானது இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் "ஆ" அத்தியாயத்திற்கமைய கீழ்வருமாறு மேற்கொள்ளப்படும்.

2.3 செயன்முறைப் பரீட்சையாக விண்ணப்பதாரரால் இனங்காணப்படும் தலைப்பு ஒன்றின் கீழ் முன்வைப்புச் செய்ய முடியும். அதற்கு கீழ்வருமாறு புள்ளிகள் உரித்தாகும்.

| தொட இல | செயன்முறைப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் நியதிகள் | உச்ச பட்ச புள்ளிகள் | சித்தியடைய அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 2 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 3 | தொடர்பாடலில் தெளிவு | 05 | 02 |
| 4 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 5 | முன்வைப்பு நுட்ப முறைகளின் பயன்பாடு | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **25** | **10** |

2.4 செயன்முறைப் பரீட்சை முறை

I. செயன்முறைப் பரீட்சைக்கு 5 நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும்.
II. செயன்முறைப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய உச்ச பட்சப் புள்ளிகள் இருபத்தி ஐந்தாகும். (25)
III. செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு நியதிகளுக்கும் ஆகக் குறைந்தது 2 புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ள வேண்டும்.
IV. செயன்முறைப் பரீட்சையின் மதிப்பீடானது கல்விக்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினரால் நடாத்தப்படும்.

.

2.5 நியதிகளின் குறிக்கோள்

**I. நோக்கம் மற்றும் பிரவேசம்**

வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்துதல் மற்றும் பாடத்தினுள் பிரவேசிப்பதற்கான திறமையை மதிப்பீடு செய்தல்

**II. ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு**

ஆசிரியர் ஒருவர் என்ற வகையில் சிறந்த ஆளுமையுடன் கூடியவராக இருத்தல் மற்றும் கற்பிக்கும் போது சிறந்த குரல் கட்டுப்பாட்டினை கொண்டிருக்கும் திறமையை மதிப்பீடு செய்தல்.

**III. தொடர்பாடலில் தெளிவு**

கற்றல் கற்பித்தல் செயன்முறையில் உரிய விடயங்களை விளைதிறன் மிக்க முறையில் தொடர்பாடல் செய்யக்கூடிய திறமையை மதிப்பீடு செய்தல்.

**IV. நேர முகாமைத்துவம்**

வழங்கப்படும் கால எல்லையினுள் நோக்கத்தை அடைந்துகொள்ளக்கூடிய திறனை மதிப்பீடு செய்தல்.

**V. முன்வைப்பு நுட்ப முறைகளின் பயன்பாடு**

நோக்கத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு நுட்ப முறைகளை சிறப்பாக பயன்படுத்தக்கூடிய திறமையை மதிப்பீடு செய்தல்.

**03**. மேற்படி பொது நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைகளில் உரிய திகதிகளில் பங்கேற்காத விண்ணப்பதாரர்கள் பின்னராக எந்தவொரு வகையில் கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.

**04**. இந் நேர்முகப் பரீட்சையில் பங்கேற்பது நியமனம் பெற்றுக் கொள்வதற்கான தகுதியொன்றல்ல என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

**05**. இந் நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வதற்காக பிரயாணச் செலவுகள் அல்லது எந்தவிதக் கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

ஏ.ஜே.எஸ்.எஸ். எதிரிசூரிய
மேலதிக செயலாளர் (தாபனம்)

ஒப்பம்/ ஜே.எம் திலகா ஜயசுந்தர
கல்விச் செயலாளர்
கல்வி அமைச்சு